தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைத்தால் நடத்தப்படும் கொள்குறிவகை (Objective type) போட்டித் தேர்வுகளில், தேர்வு நடைபெற்ற இரண்டு அல்லது மூன்று நாட்களில் வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு, உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. தேர்வில் பங்குபெற்ற தேர்வர்கள் இதன்மூலம் தேர்வில் தாங்கள் சரியெனக்கருதி அளித்த விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். தேர்வர்கள் தேர்வாணையம் வெளியிட்ட உத்தேச விடைகளில், தாங்கள் தவறு எனக்கருதும் விடைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்திலேயே மறுப்புத் தெரிவித்து சரியான விடை எதுவெனக் குறிப்பிட்டு அதற்கான உரிய ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேர்ந்த வல்லுநர் குழுவினால் தயாரிக்கப்பட்ட கேள்வித்தாளாகவே இருப்பினும், தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கென, தனித்தனியாக ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் மூன்று வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவ்வல்லுநர் குழு, தேர்வர்கள் தவறெனக் குறிப்பிடும் விடைகள் அனைத்தையும் தீவிரமாகப் பரிசீலனை செய்து வல்லுநர்கள் சரியெனக் குறிப்பிடும் விடைகளைக் கொண்டு மட்டுமே தேர்வு விடைத்தாள்கள் மதிப்பிடும் பணி மேற்கொள்ளப்பட்டு, சரியான விடைகளுக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது.

எந்தவொரு வினாவிற்கும், கொடுக்கப்பட்ட விடைகளில் சரியான விடைகள் ஏதும் இல்லையென்றாலும், கேட்கப்பட்ட கேள்விகளிலேயே குழப்பம் இருந்து சரியான விடைகளைத் தெரிவு செய்ய இயலாது என வல்லுநர் குழு அறிக்கை அளித்தாலும் அவ்வகை கேள்விகளுக்கு, அனைத்து தேர்வர்களுக்கும், அக்கேள்விக்கு அவர்கள் விடையளித்திருந்தாலும், அளிக்காமல் இருந்தாலும், உரிய மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது.

தேர்வர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த நடைமுறை அனைத்து தேர்வுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதே நடைமுறை தொகுதி Iல் அடங்கிய துணை ஆட்சியர், காவல் துறை துணை கண்காணிப்பாளர், வணிக வரித்துறை உதவி ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், மாவட்ட பதிவாளர், ஊரக வளர்ச்சித்துறையின் உதவி இயக்குநர், மாவட்ட

Created by demo-version of Universal Document Converter. Full version doesn't add this stamp.
WWW.PRINT-DRIVER.COM

வேலை வாய்ப்பு அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையின் மாவட்ட அலுவலர் ஆகிய பதவிகளுக்கான **181** காலிப்பணியிடங்களுக்கு, 03.03.2019 அன்று நடைபெற்ற முதனிலைத் தேர்விலும் பின்பற்றப்பட்டுள்ளது. அதில் கலந்து கொண்ட **168549** விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள், இடஒதுக்கீட்டு விதி மற்றும் அப்பதவிகளுக்கான அறிவிக்கையில் வெளியிடப்பட்ட பிற விதிகளின் அடிப்படையில், முதன்மை தேர்வுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட **9850** விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கொண்ட பட்டியல், முதனிலைத் தேர்வு நடைபெற்ற, ஒரு மாத காலத்தில் தேர்வாணைய வலைதளம் www.tnpsc.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் முதன்மைத் தேர்வானது **08.02.2019** நாளிட்ட தேர்வாணைய செய்தி அறிவிக்கையில் வெளியிட்டவாறு **12.07.2019, 13.07.2019** மற்றும் **14.07.2019** ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. முதன்மைத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் **10.04.2019** முதல் **20.04.2019** வரை தங்களது மூலச் சான்றிதழ்களைத் தேர்வாணைய இணையதளத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். இதற்கான குறிப்பாணை தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு தெரிவாளர்களுக்கு மின்னஞ்சல் (E-mail) மற்றும் குறுஞ்செய்தி (SMS) மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

இரா. சுதன், இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்

Created by demo-version of Universal Document Converter. Full version doesn't add this stamp.
WWW.PRINT-DRIVER.COM